புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

# அலைகளின் காலம்' நாவலில் மேலாடைப் போராட்டம்

ஸ். ஜாஸ்மின் ஷெர்லி
ஆய்வாளர்
பதிவு எண் : 2121314022016
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி
மார்த்தாண்டம் – 629165

முனைவர் செ. செல்வகுமார்
நெறியாளர்
இணைப்பேராசிரியர்,
தலைவர்,
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629165.

ஆய்வுச் சுருக்கம்

ஆரம்பகால மன்னராட்சி காலகட்டங்களில் சாதியக் கொடுமைகளால் மக்கள் அதிகப்படியான அடக்கு முறைக்கு ஆளாகின்றனர். நாடார், ஈழவர், புலையர் போன்ற சாதிகளிலுள்ள பெண்கள் எப்போதுமே மேலாடை அணியக் கூடாது என்றும் இவர்கள் மகாராஜா முன்பும் இறைவன் முன்பும் மேலாடை அணியாமல் இருப்பது மரியாதை கொடுப்பதற்கு சமம் என்ற நடைமுறையை வைத்திருந்தனர். குமரி மாவட்டத்தில் மன்னராட்சி காலத்தில் நடந்த சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கிறிஸ்தவ மிஷனெறியான சாரலஸ் மீட் என்பவர் கிறிஸ்தவ பெண்கள் தங்கள் மார்பகங்களை மறைக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். கிறிஸ்தவ பெண்கள் இதற்கு போராட்டங்கள் நடத்தி தங்கள் மார்பகங்களை மறைத்ததுமட்டுமல்லாமல் அதற்கு மேலாடையும் அணியத் தொடங்கினர். மேலாடைப் போராட்டங்கள், இரணியல், கோட்டாறு போன்ற சந்தைகளில் பெண்கள் மேலாடை அணிந்து வந்ததால் ஆதிக்கச் சாதியினரால் ஏற்படுத்தப்பட்ட போராட்டங்கள் போன்றவைகள் ‘அலைகளின் நாவல்’ வாயிலாக ஆராயப்படுகிறது.

திறவுச்சொற்கள் : மேலாடைப் போராட்டம், சீர்திருத்தம், போராட்டக் களங்கள், வஞ்சி நாடு

## முன்னுரை

குமரிமாவட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானமாக இருந்த காலத்தில் மன்னராட்சி நடைபெற்று வந்தது. நாடு இறைவனுக்குத் தானம் செய்யப்பட்டதால் நம்பூதிரிகள் என்னும் ஆதிக்கச் சாதியைச் சேர்ந்த மதவாதிகளின் நெறிமுறைகளே நாட்டின் சட்டதிட்டங்களாகவும், நடைமுறை வழக்காகவும் இருந்து வந்தது. இந்த நிலையில் ஒடுக்கப்பட்ட பதினெட்டு சாதியைச் சேர்ந்த மக்கள் தங்கள் பண்பாட்டு ஒடுக்குதல் முறையை எதிர்த்து ஆடையணியும் உரிமைக்காகப் போராடிய போராட்டமே வரலாற்றில் ‘தோள்சீலைக் கலகம்’ என்னும் மேலாடைப் போராட்டம் ஆகும்.

வரலாற்றில் பெண்கள் 1822-ஆம் ஆண்டிலிருந்து 1865 வரை 54 ஆண்டுகள் தொடர்ச்சியாக மூன்று கட்டப் போராட்டங்களை நடத்தி மேலாடையணியும் உரிமையை மீட்டெடுத்தனர்.

பிற்காலத்தில் பல்வேறு கலை இலக்கிய வடிவங்களில் இப்போராட்டம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சிறுகதை வடிவில் சு.சமுத்திரம் என்ற எழுத்தாளர் ‘தலைப்பாகை’ என்ற கதையில் இப்போராட்டம் குறித்து எழுதியிருக்கிறார். நாவலாக பொன்னீலன் எழுதிய ‘மறுபக்கம்’ இப்போராட்டத்தின் ஒரு பகுதியைக் குறிப்பிட்டாலும் அதின் உள்ளடக்கமாக மண்டைக்காடு கலவரமே முதன்மைப் பெறுகிறது. அதுபோலவே ஜெயன் மைக்கேல் என்பவர் எழுதிய ‘மூப்பர்’ என்ற நாவலிலும் ஒரு சிறு பகுதியில் மட்டுமே மேலாடைப் போராட்டம் இடம்பெறுகிறது. இதுவரை வந்த நாவல்களில் இப்போராட்டம் குறித்து அதிகம் பக்கங்களுடன்

புனைவுத்தளத்தில் காத்திரமான வெளிப்பாட்டு முறையைக் கொண்டிருப்பர் முகிலை இராசபாண்டியன் என்பதும், அவரது ‘அலைகளின் காலம்’ என்ற நாவலும் குறிப்பிடத்தக்கது.

நூலாசிரியர் – நூற்குறிப்பு

இரா. இராசபாண்டியன் என்ற இயற்பெயர் கொண்ட இவரது ஊர் குமரி மாவட்டத்திலுள்ள முகிலன்குடியிருப்பு ஆகும். இவர் அடிப்படையில் தமிழ்ப் பேராசிரியர். நந்தனம், திருவாரூர், விருத்தாச்சலம் ஆகிய அரசு கலைக்கல்லூரிகளிலும் இந்திரா காந்தி திறந்த பல்கலைக் கழகத்திலும், பணியாற்றிய இவர் முப்பது ஆண்டுகள் தமிழ் கற்பித்திருக்கிறார். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் பதிவாளராக இருந்து ஓய்வு பெற்றார்.

‘அலைகளின் காலம்’ நாவலின் முதற்பதிப்பாக டிசம்பர் 2000 ஆண்டில் வெளிவந்துள்ளது. மூன்று பதிப்புகள் கண்ட இந்த நாவலை சென்னை புழுதிவாக்கத்திலுள்ள கோவன் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இந்த நாவலை தென்திருவிதாங்கூரில் நடைபெற்ற தோள்சீலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு உயிரையும் உடைமைகளையும் இழந்த தியாகிகளுக்கு சமர்ப்பித்தலில் இருந்து அவர் மேலாடைப் போராட்டத்தில் அதிகம் கவனம் பதித்திருக்கிறார் என்பது தெரியவரும். 143 பக்கங்களைக் கொண்ட இந்த நாவல் குமரிமாவட்டத்திற்கே உரித்தான பண்பாட்டு அடையாளங்களுடன் வெளிவந்திருக்கிறது.

நாவலின் கதைமையம்

அன்றைய திருவிதாங்கூர் தமிழ் பேசும் பகுதியான இன்றைய குமரி மாவட்டம் மூன்று பண்ணையார்களின் கையில் உள்ளது. மாடன் அய்யா, அவரது தம்பி சிதம்பரம் ஆகியோர் முதன்மையாகவும், அன்று தாசில்தாராகப் பணியாற்றிய பாஸ்கரன் நாயர் இவர்களுக்குத் துணையாகவும் விளங்கிய தலைமையின் கீழ் பிடாகை என்னும் அதிகார அமைப்பு சட்டங்களை வகுத்து ஆண்டது.

பத்திரகாளி, பொன்னாயி என்னும் இரண்டு பெண்கள் அன்றைய திருவிதாங்கூரில் அடிமைப்பட்ட மக்களுக்கு ஆதரவாக வந்த கிறிஸ்தவ அருட் தொண்டரான சார்லஸ் மீட் என்பவரின் தலைமையில் கிறிஸ்தவர்களாக மாறி குப்பாயம் என்னும் மேலாடை அணிந்து பொதுவெளியான சந்தை மற்றும் வேலைசெய்யும் இடங்களில் உலவுகின்றனர். இது கண்டு பொறுக்க முடியாத மூன்று ஆண்டைகளும் கலவரம் செய்கின்றனர். அதிகமும் இரணியல் சந்தை, கோட்டாறு சந்தை ஆகிய இடங்களில் வைத்து மேலாடை அணிந்து வந்த பெண்களின் ஆடைகளைக் கிழித்தெறிகின்றனர். இப்போராட்டத்தில் பத்திரகாளி கொல்லப்படுகிறாள்.

சார்லஸ் மீட் நீதிமன்றத்தில் வழக்கு பதிக்கிறார். எனினும் பெண்களுக்கு ஆடை அணியும் உரிமை மறுக்கப்பட்டு நீதிமன்றத் தீர்ப்பு வெளியிடப்படுகிறது. ஆண்டைகள் மூவரும் சார்லஸ் மீட்டைக் கொல்வதற்கு முயற்சிக்கிறார்கள். அவர் மதம்மாறிய கிறிஸ்தவ மக்களிடம் உதவி கேட்கிறார். அவர்களால் அந்தக் கிறிஸ்தவ அருட்தொண்டரைக் காப்பாற்ற முடியாததால் உதயகிரிக் கோட்டையிலிருந்து இராணுவம் வந்து காப்பாற்றுகிறது.

கிறிஸ்தவ மக்கள் அருட்தொண்டரின் உதவியுடன் நீதிமன்றத்தில் போராடியும், அரசை வலியுறுத்தியும் தங்கள் மானம் காக்கும் உரிமையைப் பெறுகிறார்கள்.

போராட்டக் களங்கள்

வரலாற்றில் மேலாடைப் போராட்டம் என்பது 1922-ஆம் ஆண்டு முதற்கட்டப் போராட்டமாக நெய்யூருக்கு அருகில் கொத்தனாவிளை என்ற இடத்தில் ஆரம்பமானது. இரண்டாவதுகட்டப் போராட்டம் கண்ணனூரிலும், மூன்றாம் கட்டப் போராட்டம் திருவனந்தபுரத்திலும் நடந்தேறியது. இப்போராட்டத்திற்கு இடையே கோட்டாறு, இரணியல் சந்தைகளில் நடைபெற்ற பெரும் கலவரங்கள் வரலாற்று சிறப்பு மிக்கது. அவற்றை ‘அலைகளின் காலம்’ நாவல் சிறப்பாக வெளிப்படுத்துகிறது.

இரணியல் சந்தை கலவரம் தொடர்பாக பொன்னாயி, பத்திரகாளி ஆகிய பெண்கள் ஈடுபடுவதாகக் கதைப்போக்கு அமைந்துள்ளது. இக்கலவரத்தில் பாஸ்கரன் நாயர் என்ற ஆதிக்க ஜாதியைச் சேர்ந்த தாசில்தார் முக்கிய பங்கு வகிக்கின்றார்.

பத்திரகாளியின் கணவர் மாசானம். அவர் அருவாப்பெட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு மிருக்குத் தடியைத் தோளில் சுமந்து நடந்தால் அரையடி பனை உயரம் இருப்பார். ஒருநாள் பனையிலிருந்து கீழே விழுந்து அவர் இறந்தார். அன்றைக்கு தலைக்குனிந்த பத்திரகாளி இன்று வரைக்கும் தலைநிமிரவே இல்லை.

ஒருநாள் அவள் தான் வளர்த்த கோழியோடு விற்பனைக்கு தோழி பொன்னாயியுடன் இரணியல் சந்தைக்கு செல்கிறாள். இருவரும் கிறிஸ்தவ அருட்தொண்டர் சார்லஸ் மீட் அவர்களின் துணைவியார் தைத்துக்கொடுத்த குப்பாயம் என்ற உடையை அணிந்து இருக்கின்றனர். அப்போது ஆதிக்கச் சாதியினரான பாஸ்கரன் நாயர், மாடன், மாடனின் தம்பி சிதம்பரம் ஆகியோர் தங்களுடன் அழைத்து வந்த பொறுக்கிகளை வைத்து குப்பாயத்தைக் கிழித்தெறிந்தனர். ஒருவன் பத்திரகாளியின் தலைமுடியைப் பிடித்திழுத்துக் கீழேத் தள்ள அவள் தலை கல்லில் பட்டு மரித்துப் போகிறாள். பொன்னாயி தான் விற்க கொண்டு வந்த கருப்பட்டி பெட்டிக்குள் இருந்த வெட்டரிவாளை எடுத்து ஓங்கி வெட்டினாள். நிலமை மோசமாவதைக் கண்ட பாஸ்கரன் நாயர் கும்பல் வாய்க்காலுக்குள் விழுந்தடித்துக் கொண்டு ஓடியது. நெய்யூர், இரணியல் முழுவதும் செய்தி பரவியதால் ஆட்கள் திரண்டு ஆதிக்கச் சாதியினரை வெட்டிச் சாய்த்தார்கள்.

கோட்டாறு கலவரமும் பெண்கள் மேலாடையணிந்து சந்தைக்கு வந்ததால் ஆதிக்கச் சாதியினரால் உருவாக்கப்பட்டது ஆகும். இதில் இந்து நாடார்களும், கிறிஸ்தவ நாடார்களும் மதவேறுபாடுகளைத் தாண்டி ஒன்றுச் சேர்ந்து ஆதிக்கச் சாதியினருக்கு எதிராகப் போராடினார்கள். இதில் அகஸ்தீஸ்வரம் பகுதியைச் சேர்ந்த தங்கையா என்பவரை ஆதிக்கச் சாதியினர் கொலை செய்வது நாவலில் இடம்பெறுகிறது.

*சார்லஸ் மீட்டைக் கொல்ல முயல்தல்*

திருவிதாங்கூரில் 1806-ஆம் ஆண்டு றிங்கல் தௌபே என்ற கிறிஸ்தவ அருட்தொண்டரால் சீர்திருத்த கிறிஸ்தவம் நுழைகிறது. அவருக்கு பின் 1818 -ஆம் ஆண்டு பொறுப்பேற்ற சார்லஸ் மீட்டின் காலத்தில் தான் பெண்கள் தங்கள் மார்பினை மறைக்கும் மேலாடைப் போராட்டம் உருவானது. மக்களிடம் இது குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தியவர் சார்லஸ் மீட்டாவார். எனவே அவரைக் கொல்வதற்கு வகைத் தேடினர்.

ஒரு புத்தாண்டு தினத்தன்று பாஸ்கரன் நாயர் என்ற ஆதிக்கச் சாதியைச் சேர்ந்தவர் சார்லஸ் மீட்டைச் சந்தித்துப் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்கச் சென்றார். அப்போது கோபம் கொண்ட மீட், ''எங்கள் ஜனங்களைச் சந்தையிலும், தெருவிலும் அவமானப்படுத்திவிட்டு இங்கே வாழ்த்து சொல்லவா வந்திருக்கிறாய்'' என திட்டி அனுப்பினார். எனவே கிறிஸ்தவ அருள் தொண்டரைக் கொல்வதற்கு அவர்கள் மண்டைக்காடு கோயிலில் போய் சத்தியம் செய்தார்கள்.

தன்னைக் கொலைச் செய்ய முற்படுவதை அறிந்த சார்லஸ் மீட் பொது மக்களிடம் வந்து உதவிக் கேட்டார். அவர்களால் முடியாது என்பதை அறிந்தவர் உதயகிரிக் கோட்டையிலிருந்த கேப்டன் சிபால்டு என்ற ஆங்கில அதிகாரிக்குத் தகவல் அனுப்ப அவர் படைகளுடன் வந்து மிஷனெறியைக் காப்பாற்றினார். சார்லஸ் மீட் பாதிக்கப்பட்ட மக்களை அழைத்துக் கொண்டுபோய் திவானிடம் நிறுத்தினார். மேலும் இது குறித்து மகாராணி அறிக்கை வெளியிடுவார் என்னும் கூறினார்.

*வஞ்சி நாட்டு அரசி வெளியிட்ட அறிவிப்பு*

திவானின் அறிவுறுத்தலின் படி வஞ்சி நாட்டின் அரசி பார்வதிபாய் வெளியிட்ட அறிக்கையில் நாடார் சாதிப் பெண்கள் மேலாடை அணிவதற்கு யாதொரு நியாயமும் இல்லை என்றும் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய பெண்கள் தோள்சீலைக்கு பதிலாக குப்பாயம் அணியலாம் என்றும் கட்டளைப் பிறப்பித்தார். இந்த நாவலில் இதற்குப் பின் பாஸ்கரன் நாயர் குழுவினர் மேலும் அதிகமாக பெண்களின் மீது தாக்குதல்கள் நடத்தினர்.

*திருவிதாங்கூரின் அரசவிதி*

இந்த நாவலில் மகாராஜா சுசீந்திரம் கோயிலுக்கு வரும்போது கடைபிடிக்கப்பட வேண்டிய அரசவிதி விரிவாக கூறப்பட்டுள்ளது. அதில் உடை சம்பந்தமான பகுதிகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

*நாடார், ஈழவர், புலையர் போன்ற குலங்களிலுள்ள பெண்கள் எப்போதுமே மேலாடை அணியக் கூடாது. நாயர் பெண்கள் நம்பூதிரிகள் முன்பும், மகாராஜா முன்பும் மேலாடை அணியக் கூடாது. நம்பூதிரி பெண்கள் இறைவன் முன்பு மேலாடை அணியக் கூடாது.*

*இவைத் தவிர நாடார் ஒருவர் நம்பூதிரியைப் பார்க்கும் போது 36 அடிகள் தள்ளி நிற்க வேண்டும். நாயரைப் பார்க்கும் போது 12 அடிகள் தள்ளி நிற்க வேண்டும். புலையர் நம்பூதிரியைப் பார்க்கும் போது 64 அடிகள் தள்ளி நிற்க வேண்டும்.*

*நாயர்கள் வரும்போது எதிரில் அடிமைகள் வந்தால் விலகிப் போகுமாறு சத்தம் போடுவார்கள். மீறி வந்தால் உயிர்கொலைச் செய்வார்கள். அன்றைய திருவிதாங்கூரில் ஆட்சி செய்யும் மன்னர்கள் நம்பூதிரிகள் எதைச் சொன்னாலும் மகாராஜா அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலை இருந்து வந்தது.*

*மேலாடைப் போராட்டம் வெல்லுதல்*

*இந்த நாவலில் நாடார் சாதியினர் மேலாடை அணிய உரிமை பெற்றதற்கும், தங்கள் மானம் மரியாதைகளைக் காத்துக் கொண்டதற்கும் கிறிஸ்தவத்தில் இணைந்து போராடியதே காரணம் என்கிறார் நாவலாசிரியர். உதாரணமாக மாடன் என்பவர் இந்த நாவலில் ஆதிக்கச் சாதி ஆண்டை. அவருக்கு வண்டி ஓட்டும் நாடார் சாதி அடிமைப் பட்டவன் குட்டி. குட்டி கிறிஸ்தவனாகிறார். இருவருக்கும் இடையே உரையாடல் நடக்கிறது.*

*“உங்களுக்கு நாங்கள் எந்தத் தடையும் விதிக்கவில்லை தெய்வக் குற்றம் வரக்கூடாது என்று சாமியா போட்டிருக்கிற தடைத் தான் மேலாடைப் போடக் கூடாது என்பது” என்கிறான் ஆண்டை. உடனே அடிமைக் குட்டி “அதினாலத்தான் அய்யா நாங்க குற்றம் சொல்லும் சாமியை விட்டு விட்டு குற்றம் சொல்லாத இயேசு சாமிக்கிட்ட போய்கிட்டோம்” என்கிறார்.*

*உடனே மாடன், “இயேசு நம்ம சாமியல்ல வெளிநாட்டுக்காரன் சாமி” என்கிறார். உடனே குட்டி, “அப்ப நம்மசாமி ஏது?” என்று கேட்க, “நம்ம தாணுமாலையானும், பள்ளிக் கொண்ட பெருமாளும்” என்கிறார். உடனே குட்டி, “அந்த சாமி தானே எங்களை ஒதுக்கி வைத்தது. எனவே தான் இயேசு சாமியை நாங்க ஏற்றோம்” என்கிறார்.*

*இந்த மக்களை அணி திரட்டி சார்லஸ் மீட்டுக்கு பிறகு காக்ஸ் என்ற மிஷனெறி சென்னை ஆளுநருக்கு கடிதம் எழுதினார். சென்னை ஆளுநர் திருவிதாங்கூரின் திவானாக இருந்த மாதவராவ் –க்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் எழுதினார். இதன் பேரில் உத்திரம் திருநாள் மகாராஜா கிறிஸ்தவ மதத்தை தழுவிய நாடார் குலப்பெண்களைப் போன்று ஏனைய நாடார் குலப்பெண்களும், வேற்று ஜாதி பெண்களும் குப்பாயம் அணிந்து கொள்வதோடு வேறு எந்த வகையிலாவது மேலாடை அணியலாம் என்று கட்டளை பிறப்பித்தார்.*

*முடிவுரை*

*திருவிதாங்கூரில் கிறிஸ்தவத்தின் வரவால் நிகழ்ந்த மாற்றங்களான கல்விப் பரவுதல், அடிமைகள் ஒழிப்பு, வெட்டி வேலை செய்யும் ஊழியம் என்ற நடைமுறை ஒழிப்பு இவைப்போன்று போராடி வெற்றி அடைந்த வரலாறே மேலாடைப் போராட்டம் ஆகும். 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்கள் தங்கள் இழிநிலையை அகற்றுவதற்கு நடத்திய ஒரு மாபெரும் போராட்டத்தின் பதிவு இந்த நாவல் என்று கூறலாம்.*

*ஓர் அலை அடிக்கும் போது அது கீழிருந்து தண்ணீரை மேலே கொண்டு வரும். மேலே எழுந்த தண்ணீர் மீண்டும் கீழே வரும். இது ஒரு சுழற்சி கிறிஸ்தவத்தின் வருகையால் அலையின் சுழற்சி போல பல நிகழ்வுகளின் சுழற்சிகள் இருந்ததால் இந்த நாவலுக்கு “அலைகளின் காலம்” என்று பெயர் வைத்ததாக நாவலாசிரியர் முகிலை இராசபாண்டியன் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாகும்.*

துணைநூற்பட்டியல்


1. *இராசபாண்டியன், முகிலை., அலைகளின் காலம், கோவன் பதிப்பகம், எண். 11, பாலாஜி நகர் விரிவு, 33-ம் தெரு, புழுதிவாக்கம், சென்னை – 600 091.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********